9th December 1959]

SRI M. KALYANASUNDARAM : அரசாங்கம் இதற்குப் பொறுப்பா ?

MR. SPEAKER : I should like the hon. Members to put questions through the Speaker and not directly. Before I allowed the hon. Member, Sri M. Kalyanasundaram, he has asked the question. Anyway I have no objection, if the Hon. Minister is prepared to answer the question. I would advise the hon. Member not to do so in future. Otherwise, I have no place here.

SRI M. KALYANASUNDARAM : I note your observations, Sir.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : முதலாளிகளும், தொழிலாளிகளும் எல்லோரும் இதற்குப் பொறுப்பு என்று நான் சொல்லுகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : எனக்குக் கிடைத்த சில தகவல்களிலிருந்து சில அரசியல் கட்சிகளும் இதற்குப் பொறுப்பு என்று நினைக்கிறேன். (சிரிப்பு).

SRI M. KALYANASUNDARAM : அமைச்சர் அவர்கள் சார்ந்திருக்கிற காங்கிரஸ் கட்சி உள்பட என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

Hydro-electric potentialities

* 75 Q.—SRIMATHI A. S. PONNAMMAL : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

தலையார்கோம்பையிலிருந்து வரும் ஆற்றிலிருந்தும் குடவனுர் ஆற்றிலிருந்தும் மின்சார உற்பத்தி விஷயமாகப் பரிசீலனை என்ன ஆனது ?

THE HON. SRI V. RAMAIAH : The river flowing from Thalayarkombai, referred to in the question, is called Manjalar in the lower reaches. There is no proposal at present to develop hydro-electricity from this river basin, as it is considered that any scheme for such development will not be economical in view of the meagre river flow and the negligible power that could be generated therefrom. As regards development of power from the Kondavanar Basin, necessary rainfall and run-off data are being collected from the catchment area to study the possibility of hydro-electric development.

Industrial development

* 76 Q.—SRI P. G. MANICKAM : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) சென்னை ராஜ்யத்தின் தொழில் வளத்தைப் பெருக்குவதற்கு சர்க்கார் ஆலோசனைக்கு நியமிக்கப்பட்டிருக்கும் தொழிலபிவிருத்திக் கமிட்டியின் ரிப்போர்ட்டு அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டாகிவிட்டதா ?

[9th December 1959

(ஆ) அவ்வாறு அனுப்பப்பட்டிருப்பின், அந் நகல் ஒன்று சட்டசபை முன் சமர்ப்பிக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No report is required to be submitted by the State Industries Development Committee. The Committee will only generally advise Government on the development of industries in the State and on any specific matter that may be referred to it.

(b) Does not arise.

SRI P. G. MANICKAM : கிராமபுறங்களிலே குறிப்பாக ஹரிஜன காலனிகளில் ஆதிகாலத்திலே என்னென்ன தொழில்கள் நடைபெற்று வந்தன, அந்தத் தொழில்களின் நிலைமை தற்பொழுது எவ்வாறு இருக்கிறது. அந்தத் தொழில்களை மீண்டும் ஆரம்பிக்க முடியுமா என்ற பரிசீலனை சர்க்காரால் நடத்தப்பட்டதா ? அவ்வாறு நடத்தப்படாவிடின், மீண்டும் சர்வே எடுப்பது பற்றி சர்க்கார் பரிசீலனை செய்யுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : முக்கியமாக பொருளாதார நிலைமையில் தாழ்த்தப்பட்டவர்களாக இருப்பவர்களுக்கு உதவி அளிக்கும் வகையில், அவர்களை கை தூக்கும் வகையிலே என்னென்ன தொழில்களை அமைக்கலாம் என்பது அவ்வப்பொழுது பரிசீலனை செய்யப்பட்டு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது.

Aluminium plant

MR. SPEAKER : கேள்வி 77, 78 அண்டு 90-எ, இந்த மூன்று கேள்விகளும் அலுமினியம் தொழிற்சாலையைப் பற்றியது. ஆகையால் இந்த மூன்று கேள்விகளையும் சேர்த்து எடுத்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

* 77 Q.—SRI P. G. MANICKAM AND SRI M. P. SARATHI : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

சென்னை ராஜ்யத்திலே அலுமினிய தொழிற்சாலையொன்றை ஏற்படுத்துவதற்கான யோசனை திட்டத்தின் மீது இத்தாலிய ஸ்தாபனம் ஒன்றின் பிரதிநிதிகளால் தெரிவிக்கப்பட்ட அறிக்கையின் விவரங்கள் யாவை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The report of the Italian Experts on Salem Aluminium Plant is encouraging. The Report contains the details of the quality and quantity of Salem Bauxite Deposits and the financial implications of the project.

* 78 Q.—SRI P. G. MANICKAM : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) தனியார் துறையில் அலுமினியம் தொழிற்சாலை நடத்துவதற்கான நடவடிக்கைகளை ஆராய்ந்தறிய நியமிக்கப்பட்ட